001606

**பேரூராட்சிகளின் இயக்குநர் சென்னை–28, அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை:– திரு.கிரண் குராலா, இ.ஆ.ப.,**

ந.க.எண்.15514/2021/அ6 நாள்: 31.05.2023

பொருள் : பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – தஞ்சாவூர் மண்டலம் – தஞ்சாவூர் மாவட்டம் – மதுக்கூர் பேரூராட்சி இளநிலை உதவியாளர் கண்ணன்(திரு).இரா – 17.12.2017 அன்று பணியிடைக் காலமானார் – அன்னாரது வாரிசுதாரர் மற்றும் மகன் வினோத்(திரு).க – என்பவருக்கு ஒரத்தநாடு பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிநியமனம் செய்யப்பட்டது – 09.03.2019 முற்பகல் முதல் பணியில் சேர்ந்தது – பணிவரன்முறை செய்தல் – ஆணையிடப்படுகிறது

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம் – 6 JUN 2023 தஞ்சாவூர் - 613 0..

பார்வை :
1. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் நடவடிக்கைகள் ந.க.எண்.252/2019/பே2, நாள்.08.03.2019
2. அரசாணை (நிலை)எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)துறை, நாள். 26.02.2021
3. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் கருத்துரு ந.க.எண்.671/2020/பே2 , நாள். 26.11.2021
4. இவ்வியக்ககக் கடிதம் ந.க.எண்.15514/2021/அ6, நாள்.12.03.2022
5. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் கடிதம் ந.க.எண்.671/2020/பே2 , நாள். 09.05.2023

******

ஆணை:–

தஞ்சாவூர் மண்டலம் தஞ்சாவூர் மாவட்டம் மதுக்கூர் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து 17.12.2017–ல் பணியிடைக் காலமான திரு.இரா.கண்ணன் என்பவரின் வாரிசுதாரரும் மகனுமாகிய திரு.க.வினோத் என்பவருக்கு பார்வை 1–ல் காணும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிநியமனம் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தனியர் 09.03.2019 முற்பகல் முதல் வரித்தண்டலர் பணியில் இணைந்து நாளது வரை பணிபுரிந்து வருகிறார்.

அதனை தொடர்ந்து கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்ற திரு.க.வினோத் என்பவரது பணியினை வரன்முறை செய்யக் கேட்டு பார்வை 3–ல் காணும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவரிடமிருந்து பரிந்துரை செய்து கருத்துரு வரப்பெற்றுள்ளது. அதனடிப்படையில் இந்நேர்வில் பரிசீலிக்கப்பட்டதில் பார்வை 2–ல் காணும் அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(கியூ) துறை, நாள்.26.02.2021–ல்

வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளின்படி நியமன அலுவலருக்கு ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற பேரூராட்சிகளின் இயக்குநர் நிலையிலேயே இந்நேர்வில் பணிவரன்முறை செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்காணும் விவரங்களின் அடிப்படையில் தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிபுரிந்து வரும் திரு.க.வினோத் என்பவரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாள் முதல் கீழ்க்காணும் விவரப்படி பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பணியாளர் பெயர் / பணியாளர் நிலை | பணிபுரியும் பேரூராட்சி | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்த நாள் |
|---|---|---|---|---|
| 1 | திரு.க.வினோத் வரித்தண்டலர் | ஒரத்தநாடு பேரூராட்சி | 09.03.2019 மு.ப | 09.03.2019 மு.ப |

மேலும் இப்பொருள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொண்டு தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகளை மேற்கொள்ளவும் மற்றும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான பணிப்பதிவேட்டின் நகலினை இவ்வியக்ககத்திற்கு அனுப்பிடவும் தஞ்சாவூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இயக்குநர்

பெறுநர்
திரு.க.வினோத்
வரித்தண்டலர்
ஒரத்தநாடு பேரூராட்சி
தஞ்சாவூர் மாவட்டம்.
(தஞ்சாவூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் வாயிலாக)

நகல்:–
1. மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் மாவட்டம்
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம்
3. செயல் அலுவலர், ஒரத்தநாடு பேரூராட்சி
4. அ6 இருப்பு கோப்பு
5 அ2 இருக்கை எழுத்தர் (தொடர் நடவடிக்கைக்கு)

ந.க.எண்.671/ 2020/ பேரூ.2
நாள்: 14 .06.2023.

பேரூராட்சிகள் உதவி இயக்ககம்,
தஞ்சாவூர் மண்டலம்,
மாவட்ட ஆட்சியரகம், தஞ்சாவூர்.

சென்னை பேரூராட்சிகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.15514/2021/அ6 நாள் 31.05.2023 உரியவருக்கு சார்வு செய்யப்படுகிறது.

14/6/23

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்(பொ),
தஞ்சாவூர் மண்டலம்.

பெறுநர்
திரு. க. வினோத், வரித்தண்டலர்,
ஒரத்தநாடு பேரூராட்சி, தஞ்சாவூர் மாவட்டம்.
(செயல் அலுவலர் மூலமாக)

14.6.23

14/06/2023